**பக்கம்-2**

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,திண்டுக்கல்**

**அமர்வு வழக்கு எண்.54/2022**

**அ.சா. -8-தவமணி**

**நாள்.04.01.2024**

1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.

**சாட்சி மனு உத்தரவின்படி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யபட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்**

**1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இரண்டலைப்பாறை என்பது திண்டுக்கல் தாலுகா எல்லைக்குள் உள்ளது. நான் வசிப்பது அச்சராஜக்காபட்டியில். நான் கட்டிடங்களுக்கு செண்ட்ரிங் கான்டராக்ட் செய்து வருகிறேன். இரண்டலைப்பாறைக்கும் எனது ஊருக்கும் இடையில் சுமார் 20 கி.மீ தூரம் இருக்கும் என்றால் இல்லை 4 அல்லது 5 கி.மீ இருக்கும். 1 ஆம் எதிரி சீரஞ்சிவியை ஆய்வாளர் தனியாக அழைத்து விசாரித்தார். அவர்கள் என்ன பேசினார்கள் என்ற விபரம் தெரியாது என்றால் சரிதான். இறந்த கருப்பையாவும் நானும் உறவினர்கள் இல்லை. நாங்கள் இருவரும் ஒரே சமுகத்தை சேர்ந்தவர்கள் என்றால் இல்லை. நான் இறந்த கருப்பையாவின் உ றவினர் என்றும், தற்போது அதை மறைத்து இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. இரண்டலைப்பாறை குளம் அருகில் யாரும் வசிக்கவில்லை என்றால் சரிதான். என்னை யாரும் இந்த இடத்திற்கு வருமாறு அழைத்தார்களா என்றால் யாரும் என்னை அழைக்கவில்லை. நான் இரண்டலைப்பாறை குளத்தின் அருகில் வேலை பார்த்துக் கொண்டிருந்த போது எத்தனை போலீசார் வந்தார்கள் என்றால் 4 போலீசார் வந்தார்கள். அதில் ஒருவர் இன்ஸ்பெக்டர். அவர்களில் யார் டைப் அடித்தார்கள் என்றால் ஜீப்பில் வைத்து எழுதிக் கொண்டார்கள் பின்னர் காவல் நிலையம் சென்று டைப் செய்து கொண்டு வந்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். நான் இரண்டலைப்பாறை குளத்தின் அருகில் வேலை பார்த்த வீட்டின் உரிமையாளர் பெயரை போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லவில்லை. போலீசார் என்னிடம் டைப் அடித்த பேப்பரில் மட்டும் தான் கையொப்பம் வாங்கினார்கள். போலீசார் என்னிடம் டைப் அடித்த 2 தாள்களில் கையொப்பம் வாங்கினார்கள். நான் மட்டும் தான் இரண்டலைப்பாறை அருகில் இருந்தேன் என்றும், அந்த வழியாக வேறு யாரும் போய் வரவில்லை என்றால் வாகனங்கள் போய் கொண்டு இருந்தன. நான் சம்பவம் இடம் போகவில்லை என்றும் போலீசார் கேட்டுக்கொண்டதால் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன்

என்றால் சரியல்ல. குரு என்பவர் எனது உறவினர் இல்லை, என் உடன் வேலை பார்ப்பவர். நான் 15.06.2021 தேதியன்று 1,2 எதிரிகளை பார்க்கவில்லை என்றும், அவர்களுக்கு எதிராக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொல்வது சரியல்ல. 15.06.2021ம் தேதியன்று எங்களுடன் வேலை பார்த்த மற்ற பணியாளர்கள் பெயர் என்ன என்றால் நானும், குருவும் மட்டும் தான் அன்று வேலை பார்த்தோம், மற்றவர்கள் அன்றைய தினம் லீவு போட்டு விட்டார்கள். கட்டிட வேலைக்கு பல நபர்கள் வருவார்கள் என்றும், எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிப்பதால் அன்றைய தினம் வேறு யாரும் வரவில்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானும் குருவும் மட்டும் அன்று வேலை பார்த்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இரண்டலைப்பாறை குளம் அருகில் நான் வேலை பார்த்த வீட்டின் உரிமையாளர் பெயர் தெரியவில்லை.

<u>3ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

15.06.2021ம் தேதி 3ம் எதிரி நான் சொன்னது போல் அந்த இடத்திற்கு வரவில்லை என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதற்காக 3ஆம் எதிரி வந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை– இல்லை</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN
Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.01.04 17:28:07 +0530

Additional District Judge,

Dindigul.